4th November 1957]

Sri M. KALYANASUNDARAM : கஜானுக்களை தனியாகப் பிரிப்பதன் மூலம் அதிகச் செலவாகுமென்று குறிப்பிட்டார்கள். ஓரளவு செலவு அதிகமாகலாம். அதனுல் ஏற்படும் அனுகூலம், இந்த கஜானுக்களில் ஏற்படக்கூடிய துஷ்பிரயோகத்தைத் தடுக்க முடியும் என்பதைக் கருதியாவது இவைகளைப் பிரிக்கவேண்டுமென்பது சர்க்கார் ஆலோசனையில் இருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி அனுகூலம் இருக்கலாம். ஆனுல் இப்போது இருக்கும் நிதி நிலைமையில் கொஞ்சம் கஷ்டமிருப்பதை அனுசரித்து தாமதமாகப் போகவேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது என்றுதான் சொன்னேன்.

Nationalization of suburban bus routes

* 76 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any proposal to nationalize the bus routes in the suburbs of the Madras City ; and

(*b*) if so, when it will be given effect to?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir, on certain routes in which the State Transport is operating, there is keen and unhealthy competition from private operators. The Government are considering whether these routes may be nationalized.

Sri M. KALYANASUNDARAM : அந்த மாதிரி எந்தெந்த ரஸ்தாக்களை, எந்தெந்த ஊர்களுக்குப் போகும் மார்க்கங்களை சர்க்காரே எடுத்துக் கொள்ளும் விஷயம் ஆலோசனையிலிருக்கிறது. இதைப் பற்றி இறுதி முடிவு எப்போது எடுக்கப்படுமென்று எதிர்பார்க்கலாம் ?

The Hon Sri R. VENKATARAMAN : ரூட் நம்பர் 56 மதராஸ்—திருவொற்றியூர், ரூட் நம்பர் 57 மதராஸ்—ரெட் ஹில்ஸ், இந்த இரண்டு ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறது. இதற்கு அப்ஜெக்ஷன் யாராவது சொல்லுகிறார்களா என்று பரிசீலனை செய்து காலம் முடிந்தவுடன் சர்க்கார் முடிவு செய்யும்.

Sri K. VINAYAKAM : Was not a notification published, Sir, regarding the route from Madras to Kancheepuram about nationalization of that route?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir. Ordinarily, the State Transport files its objection whenever buses radiating from Madras City are about to be licensed. There was no such notification for taking over the route entire from Madras to Kancheepuram.

Sri V. K. RAMASWAMY MUDALIAR : சென்னை நகரத்திலே போதுமான பஸ்கள் இல்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுவது அமைச்சருக்குத் தெரியும். சமீபத்தில் நடந்த பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் டைரக்டர் சொன்னுர், இம்போர்ட் ரெஸ்ட்ரிக்ஷனுல் போதுமான வண்டிகள் கிடைப்பதில்லையென்று. கன்னியாகுமரி ஜில்லா நம் ராஜ்யத்தோடு சேர்ந்தபிறகு அங்கு வண்டிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பழைய வண்டிகளைப் புதுப்பிக்க வேண்டும். இந்தக் காரணத்தால் இந்தப் பிராந்தியத்திலே வேண்டிய வண்டிகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டு மற்ற ரூட்டுகளை பின்னிட்டு எடுத்துக் கொள்ள சர்க்கார் யோசிக்குமா ?

[4th November 1957

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை நகரத்திலே இப்போது போதிய அளவு வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தாழ்மையாக (ஸ்ரீ எம். கல்யாணசுந்திரம்: "பெருமையாக" என்று சொல்லுங்கள்) தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 56, 57 ரூட்டுகளில் இப்போது தனியார் 56-ல் 4-ம் 57-ல் 2-ம் ஆக வண்டிகள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த இரண்டையும் ஏன் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொன்னால் சர்க்கார் பஸ் அங்கு வருகிறது என்று தெரியும் வரை பஸ்ஸை ஸ்டாண்டில் நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். பஸ் வருகிறதென்று தெரிந்தவுடன் வேகமாகப் போய் அடுத்த ஸ்டாண்டில் நிறுத்திக் கொள்கிறார்கள். இப்படி சர்க்கார் பஸ்ஸுக்கு எந்த விதமான வருமானமும் வராமல் நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதால்தான் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

9–20 a.m. SRI M. KALYANASUNDARAM : இதே போன்று 54, 53 பூந்தமல்லி போகிற பஸ் ரூட்டுகளையும் சர்க்கார் எடுத்து நடத்த யோசிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எடுப்பதற்கு யோசிக்கப்படும்.

SRI M. R. KANDASWAMY MUDALIYAR : தனிப்பட்ட முதலாளிகள் நடத்தக்கூடிய கம்பெனிகளில் வரக்கூடிய வருமானத்தைக் காட்டிலும் சர்க்கார் எடுத்து நடத்தும் ரூட்டுகளில் பஸ்களுக்கு அதிகமான வருமானம் வராமல் இருப்பதற்கு காரணம் அங்கிருக்கும் தொழிலாளர்களுடைய அசிரத்தையும் கவனக் குறைவும் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன். சர்க்கார் எடுத்து நடத்தும் காரணத்தினால் அதிக லாபம் வரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதிக லாபத்தைக் கருதி பஸ் சர்வீசை எடுத்து நடத்தவில்லை. எந்தக் காரியத்தை எடுத்து நடத்தினாலும் சர்க்கார் லாபத்தைக் கருதி நடத்தவில்லை. ஆனால் இப்பொழுது அதிக லாபம் வரவில்லை என்று சொல்வது சரியல்ல.

SRI A. A. RASHEED : Has the Government received any request from the Corporation of Madras to hand over the City buses to the Corporation?

THE HON. SRI R. VENKATARAMAN : எல்லோரும்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுந்தான் "கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

Department dealing with house-sites for Harijans in districts

* 77 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state the name of the department which is under the control of the Collector in the districts which deals with the question of provision of house-sites for Harijans ?

THE HON. SRI P. KAKKAN : The Revenue Department under the control of the Collector deals with the question of provision of house-sites to Harijans in the district.

SRI P. G. MANICKAM : நமது சென்னை சர்க்கார் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு என்று குறிப்பாக ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று வீட்டு மனைக்கட்டுகளை வாங்கிக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதில் முயற்சி எடுத்துக்கொண்டு மிகவும் அக்கரையும் காட்டிக்கொண்டு வருகிறார்கள். அதற்காக வருஷந்தோறும் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி வைக்கிறார்கள். ஆனால் ஒதுக்கப்படும் பணம் செலவழிக்கப்படாமல் வருஷந்தோறும் கவர்ண்மெண்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டு வருகிறது. இதை யோசித்துப் பார்க்கும்போது அங்குள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க........